**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 05.06.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

ஏழைகள் நலனில் அர்ப்பணிப்புக் கொண்ட, கருணை மிகுந்த அரசாகத் தமது அரசு திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கண்ணியமாக வாழும் வாய்ப்பை அனைவருக்கும் வழங்கக் கூடிய, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில், அரசின் கடமைப்பற்று, தொடர்ந்து நீடிப்பதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில், **சிந்தூர் மரக்கன்று** ஒன்றை நட்டு வைத்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடுகளை வெளிநாடுகளில் எடுத்துக் கூறும் பணிகளை முடித்துக் கொண்டு, இதுவரை 5 அனைத்துக் கட்சிக் குழுக்கள், தாயகம் திரும்பி உள்ளன.

-------------------------

*மோடி-கரீப் கல்யாண்* (16)

ஏழைகள் நலனில் அர்ப்பணிப்புக் கொண்ட, கருணை மிகுந்த அரசாகத் தமது அரசு திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். அரசு 11 ஆண்டுகளை பூர்த்தி செய்வதை ஒட்டி, இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், வறுமையில் இருந்து மக்களை விடுவிக்கவும், அனைவருக்கும் அதிகாரம், மற்றும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும், முக்கியமான பல்வேறு முயற்சிகளை தாங்கள் எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஆயுஷ்மான் பாரத் போன்ற அரசின் திட்டங்களால், நாட்டு மக்களுக்கு, வீடு, தூய எரிபொருள், வங்கி சேவை, மற்றும், மருத்துவ வசதிகள் கிடைப்பது எளிதாகி இருப்பதாகவும், டிஜிட்டல் வசதிகள் காரணமாக, அரசின் உதவிகள்

மக்களுக்கு கிடைப்பதில், வேகம், மற்றும், வெளிப்படைத் தன்மை அதிகரித்து இருப்பதாகவும், பிரதமர் கூறியுள்ளார். அரசின் பல்வேறு முன் முயற்சிகளால், நாட்டில் 25 கோடிக்கும் மேற்பட்டவர்கள், வறுமையை வென்றுள்ளதாகவும், கண்ணியமாக வாழும் வாய்ப்பை அனைவருக்கும் வழங்கக் கூடிய, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில், அரசின் கடமைப்பற்று தொடர்ந்து நீடிப்பதாகவும், பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

-------------------------

*பதினோராம் ஆண்டு 1 (8)*

இந்தியா கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளன. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்டு முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி சிறப்பு தொடர் ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், இந்தியாவின் அமிர்தகால இளம் தலைமுறையினருக்கு அதிகாரம் அளிப்பதில் முக்கிய பங்காற்றும் கல்வி, மற்றும், விளையாட்டுத் துறையின் முன்னேற்றம் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*பதினோராம் ஆண்டு* 2 (19)

**(வாய்ஸ்)**

மொத்த மக்கள் தொகையில், மூன்றில் இரண்டு பங்கினர், 35 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களாக உள்ள நாடான இந்தியாவில், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போவது இளைஞர்கள்தான். அரசு இதை கருத்தில் கொண்டே, கல்வி, மற்றும், விளையாட்டு மூலம், எதிர்கால கனவுகளுக்கு அடித்தளம் அமைத்து வருகிறது. கல்வித் துறையை பொருத்தவரை, ஆரம்பக் கல்வி முதல், உயர்க் கல்வி வரை, அனைவருக்கும் முழுமையான கல்வி வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிபடுத்த, பெருமெடுப்பிலான செயல் திட்டம் ஒன்றை அரசு அமல்படுத்தி வருகிறது. 2020ஆம் ஆண்டு, தேசியக் கல்விக் கொள்கையின் கீழ், தொடக்கக் கல்வி, மற்றும், இடைநிலைக் கல்வியில், 2030ஆம் ஆண்டிற்குள், 100 சதவிகித மாணவர் சேர்க்கையை உறுதிபடுத்தவும், உயர் கல்வியில், 2035ஆம் ஆண்டிற்குள், 50 சதவிகித மாணவர் சேர்க்கையை உறுதிபடுத்தவும், அரசு இலக்கு நிர்ணயித்து, அதன்படி செயல்பட்டு வருகிறது. 2014ஆம் ஆண்டிற்கு பின்னர், நாட்டில் மொத்தம் உள்ள உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை, 51 ஆயிரத்தில் இருந்து, 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டதாக அதிகரிக்கப்பட்டு, ஐஐடி, ஐஐஎம், எய்ம்ஸ் போன்ற உயர் கல்வி

நிறுவனங்களும், பெரிய அளவில், விரிவாக்கம் செய்யப் பட்டுள்ளன. தரமான கல்வி, முழுமையான மேம்பாடு, மற்றும், 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ற திறன்களை

*பதினோராம் ஆண்டு 3 (19)*

மாணவர்களுக்கு வழங்குவதுடன், அருகாமைப் பள்ளிகளுக்கு ஆலோசனை வழங்கத் தக்கதாகவும் பள்ளிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், நாடு முழுவதும், 14 ஆயிரத்து 500 பள்ளிகள், பிஎம்-ஸ்ரீ திட்டத்தின் கீழ், தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. நாட்டில் கல்வியுடன் கூடவே விளையாட்டுத் துறையும், தேசிய முன்னுரிமைத் துறையாக மேம்பட்டுள்ளது. கேலோ இண்டியா திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டுப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளம் வீரர்-வீராங்கனைகளக்கு, 6.28 லட்சம் ரூபாய் வருடாந்திர நிதி உதவி வழங்கப் படுகிறது. ஒலிம்பிக் பீடமே லட்சியம் என்னும் TOPS திட்டத்தின் கீழ், இந்தியாவின் முன்னணி விளையாட்டு வீரர்-வீராங்கனைகளுக்கு, பயிற்சி மற்றும் விளையாட்டு உபகரணங்களும், சர்வதேச வாய்ப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளின் பலனாகவே, இந்தியா கடந்த 2 ஒலிம்பிக் போட்டிகளில், 13 பதக்கங்களை வென்றதுடன், பாரீஸ் பாரா ஒலிம்பிக்ஸ் போட்டிகளிலும், 29 பதக்கங்களை வென்று, சாதனைப் படைத்துள்ளது. இந்தியா, தன் இளைஞர்களுக்கு, எழுதவும்- படிக்கவும் கற்றுத் தருவதற்கு மேல், பெரிதாகக் கனவு கண்டு, லட்சியத்தை நோக்கி துரிதமாக பயணிக்கவும், இலக்கை எட்டும் வரை ஒருபோதும் நிற்க வேண்டாம் என்பதையும், கற்றுக் கொடுக்கிறது.

------------------------

*மோடி சுற்றுச் சூழல் (12)*

உலக சுற்றுச் சூழல் தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில், **சிந்தூர் மரக்கன்று** ஒன்றை நட்டு வைத்தார். 1971ஆம் ஆண்டு, இந்தியா-பாகிஸ்தான் போரின் போது, அசாதாரண துணிச்சல் மற்றும் தேசப்பற்றை வெளிப்படுத்திய, குஜராத் மாநில வீரத் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளால், இந்த மரக்கன்று பிரதமருக்கு பரிசாக வழங்கப்பட்டது.

ஆரவல்லி மலைத் தொடர் நெடுகிலும் **பசுமை சுவர்** ஒன்றை அமைக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக, புதுடெல்லியில் உள்ள, **பகவான் மகாவீர் வனஸ்தாலி பூங்கா**வில் இன்று நடைபெற்ற சிறப்பு மரம் நடு இயக்கத்திற்கும் பிரதமர்

தலைமையேற்றார். டெல்லி நகரின் போக்குவரத்துத் தேவைகளுக்கான 200 மின்சார பேருந்துகளையும், அவர் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

-------------------------

*அனைத்துக் கட்சி* (14)

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடுகளை, வெளிநாடுகளிடம் எடுத்துக் கூறும் பணிகளை முடித்துக் கொண்டு திரும்பி உள்ள அனைத்து கட்சி பிரதிநிதிக் குழுக்களில், ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் ஜா தலைமையிலான குழுவினரும், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினரும், இன்று புதுடெல்லியில், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்தனர். காங்கிரஸ் எம்.பி திரு. சசிதரூர் தலைமையிலான அனைத்துக் கட்சி பிரதிநிதிக் குழுவினர், அமெரிக்காவில், தலைவர்கள், மூத்த அதிகாரிகள், மற்றும், இந்திய வம்சாவளியினரை சந்தித்து, இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூறினர். பின்னர் திரு. சசிதரூர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தீவிரவாத தாக்குதல்களை கண்டிப்பதிலும், சுய பாதுகாப்பிற்கான இந்தியாவின் உரிமைகளை ஆதரிப்பதிலும் அமெரிக்காவில் பொதுக் கருத்து இருப்பதாகக் கூறினார்.

-------------------------

***பரம்வீர் சக்ரா*-1** (7)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1947 – 48 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போது, நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, நாயக் ஜாதுநாத் சிங் குறித்து ஒரு செய்தி தொகுப்பு….

**(வாய்ஸ்)**

***பரம்வீர் சக்ரா*-2** (19)

**(வாய்ஸ்)**

1916ஆம் ஆண்டு, உத்தரபிரதேசத்தில் பிறந்த நாயக் ஜாதுநாத் சிங், 1941ஆம் ஆண்டில், முதலாவது ராஜபுத்திரப் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் ஆவார். 1947-48ஆம் ஆண்டு, இந்தோ-பாக் போரின் போது,

பாகிஸ்தான் படையினர் 1947 டிசம்பரில், ஜங்கார் பகுதியை கைப்பற்றியதால், போர் முக்கியத்தும் அதிகம் உள்ள நவ்ஷாரா பகுதியில், எதிரிகளின் கை ஓங்கிய நிலையில், எதிரிகள் மீண்டும் தாக்கக் கூடும் என்ற கணிப்பின் அடிப்படையில் இந்தியப் படையினர், தைன்தார் மலைமுகடு உள்ளிட்ட முக்கிய நிலைகளில் பாதுகாப்பை வலுப்படுத்தினர். தைன்தார் மலை முகட்டில் இருந்த முன்னணி ராணுவ நிலை ஒன்றை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட, 9 வீரர்கள் அடங்கிய குழுவிற்கு, நாயக் ஜாதுநாத் சிங் தலைமையேற்றார். 1948ஆம் ஆண்டு, பிப்ரவரி 6ஆம் தேதி, பனி மூடிய காலைப் பொழுதில், எதிரிப் படையினர், தைன்தார் நிலை மீது பெரும் எடுப்பிலான தாக்குதலை தொடக்கினர். நூற்றுக்கும் மேற்பட்ட பாகிஸ்தானிய துருப்புகள், முதல் அலையாக, இந்தியப் படைகளின் 2ஆவது காவல் நிலையை நோக்கி முன்னேறி வந்தபோது, நாயக் ஜாதுநாத் சிங் தலைமையிலான படைக் குழுவினர், எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தும், பாகிஸ்தான் படையினரை வலுவாக திருப்பித் தாக்கி, அவர்களை, குழப்பத்திலேயே பின்வாங்கச் செய்தனர். ஜாதுநாத் சிங் தலைமையிலான படைக் குழுவில், 4 பேர் இதில் காயமடைந்த

***பரம்வீர் சக்ரா***-3 (20)

போதிலும், எஞ்சி இருந்த வீரர்களை அவர் துரிதமாக ஒருங்கிணைத்து தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டார். இதில் அவருக்கே காயம் ஏற்பட்ட நிலையிலும், காயமடைந்த வேறொரு வீரரின் துப்பாக்கியை அவர் தன் கையில் எடுத்து சரமாரியாக சுட்டதால், 2ஆவது அலையாக வந்த எதிரிப் படையினரின் முன்னேற்றம் உடனடியாக தடைப்பட்டது. **அநேகமாகத் தோல்வி** என்ற அனுகூலமற்ற நிலையை, அவர் இந்நடவடிக்கை மூலம், உறுதியான பாதுகாப்பு நிலையாக, மாற்றிக் காட்டினார். ஆனால் அதன் பின்னரும், நாயக் ஜாதுநாத் சிங்கின் சக வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டு, அல்லது, காயமடைந்த நிலையில், எதிரிப் படையினர் 3ஆவது அலையாக மீண்டும் தாக்குதலை தொடங்கினர். ஜாதுநாத் சிங், உடலில் ரத்தம் கொட்டக் கொட்ட, தனி ஒரு ஆளாகவே பதுங்கு குழியில் இருந்து வெளிவந்து, ஸ்டென் துப்பாக்கி மூலம் எதிரிகளை கடுமையாக தாக்கியதால், எதிரிகள் அலறி அடித்துக் கொண்டு, சிதறி ஓடினர். இறுதியான இந்த வீரச் செயலின் போது எதிரிகளின் 2 குண்டுகள், ஜாதுநாத் சிங்கின் தலையிலும், மார்பிலும் பாய்ந்து அவரை வீழ்த்திய போதிலும், அவரது வீரம், மற்றும், கடைசி வரை விட்டுக் கொடுக்காத தலைமைத்துவம் காரணமாகவே, இந்தியக் காவல் நிலையை எதிரிகள் கைப்பற்ற முடியாமல் போயிற்று. நாயக் ஜாதுநாத் சிங்கின் அசாதாரண துணிச்சல் மற்றும் உயிர்த்

தியாகத்திற்காக, மரணத்திற்கு பிந்தைய முறையில், அவருக்கு, பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

-------------------------

*புதுச்சேரி-சுற்றுச் சூழல்* (9)

புதுச்சேரியில் இன்று மாலை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில், கடற்கரை சாலை காந்தி சிலை அருகே நடைபெறும் உலக சுற்றுச் சூழல் தினவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், மற்றும், தலைமைச் செயலர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் பங்கேற்கிறார்கள். உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி இன்று, புதுச்சேரி அரசின் தலைமைச் செயலத்தில் அதிகாரிகள், மற்றும், ஊழியர்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

-------------------------

*வானிலை (7)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. நாளை வரை வெப்பநிலை ஓரிரு இடங்களில், இயல்பை விட, 2 முதல், 3 டிகிரி செல்சியஸ் வரை, அதிகமாக பதிவாகலாம் என்றும், என்றும், வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகமாக உள்ள நிலையில், ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*ராமர் கோவில்* (9)

அயோத்தி ராமர் கோவிலின் முதல் தளத்தில், ராமர், சீதை, லட்சுமணர் மற்றும் அனுமார் அடங்கிய **ராம் தர்பார் மூர்த்தியின்** பிராணப் பிரதிஷ்டை விழா, வேத மந்திரங்கள் முழங்க, இன்று விமர்சையாக நடைபெற்றது. கங்கா தசரா தினமான இன்று, முற்பகல் மணி 11.25-க்கு, புனிதமான அபிஜித் முகூர்த்தத்தில் நடைபெற்ற இவ்விழாவில், உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ராம் லல்லாவை தரிசிக்க, அயோத்தியில் குவிந்துள்ள பக்தர்களுக்கு தேவையான எல்லா வசதிகளும் முழு அளவில் செய்யப் பட்டுள்ளதாக, மாநில அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஏழைகள் நலனில் அர்ப்பணிப்புக் கொண்ட, கருணை மிகுந்த அரசாகத் தமது அரசு திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கண்ணியமாக வாழும் வாய்ப்பை அனைவருக்கும் வழங்கக் கூடிய, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில், அரசின் கடமைப்பற்று, தொடர்ந்து நீடிப்பதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில், **சிந்தூர் மரக்கன்று** ஒன்றை நட்டு வைத்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடுகளை வெளிநாடுகளில் எடுத்துக் கூறும் பணிகளை முடித்துக் கொண்டு, இதுவரை 5 அனைத்துக் கட்சிக் குழுக்கள், தாயகம் திரும்பி உள்ளன.